2012 ஏப்ரல் 9]

முதல்வர் அம்மா அவர்கள் தொலைநோக்குத் திட்டம் 2023–ஐ தயாரித்திருக்கிறார்கள். 2025 ஆம் ஆண்டு வருகின்றபோது, நம்முடைய தமிழகம், இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களைக் காட்டிலும் கூடுதலாக 25 சதவீதம் என்ற அளவில் உயர் கல்வி பெற்றவர்களின் எண்ணிக்கையை உயர்த்தவேண்டுமென்ற நோக்கத்தோடு மாண்புமிகு அம்மா அவர்கள் கூடுதலாக கல்வி நிலையங்களையும், கல்வி கற்பதற்கு வசதி வாய்ப்புகளையும், உயர் கல்வி பெறுவதற்கு பல்வேறுபட்ட சலுகைகளையும் வழங்கி வருகின்றார்கள். அந்த அடிப்படையில் மேலும் பல கல்லூரிகள் தொடங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படி வருகின்றபோது உறுப்பினர் குறிப்பிட்ட தொகுதியில் உள்ள தேவையை அறிந்து புதிய கல்லூரி திறப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்யும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

54—

பயிற்சிகள்

***5973—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புழல் மத்திய சிறையிலுள்ள மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரியின் மூலமாகக் கைதிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சிகளை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழகத்தில் இருக்கின்ற மத்திய சிறைச்சாலைகளிலே, குறிப்பாக புழல் சிறைச்சாலையிலே இருக்கின்ற சிறைவாசிகளுக்கு, மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரியின்மூலம் தொழிற்கல்விக்குப் பயிற்சி

அளிக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். தற்போது தமிழகத்தில் இருக்கின்ற மத்திய சிறைச்சாலைகள், புதுக்கோட்டையில் இருக்கின்ற பார்ஸ்டல் பள்ளி, 3 பெண்களுக்கான தனி சிறைச்சாலைகளிலே, தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகம்மூலம் மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரியுடன் இணைந்து சிறைவாசிகளுக்கு 14 வகையான தொழில் சார்ந்த கல்வி கற்றுக் கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட புழல் சிறைச்சாலையிலே 4 சக்கர வாகனம் பழுதுபார்க்கின்ற பட்டயப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பெண் சிறைவாசிகளுக்கு அழகு சாதன பயிற்சி அளிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, First time offender என்று சொல்லக்கூடிய முதல் முறை குற்றம் சுமத்தப்பட்டவர்களைத் தனிமைப்படுத்தக்கூடிய வகையில் சிறை அமைத்து, ஏற்கெனவே habitual offender என்று சொல்லக்கூடிய கைதேர்ந்த குற்றவாளிகளுடன் கலவாமல் இருப்பதற்குத் தனியாக சிறைச்சாலைகள் அமைக்க அரசிடம் கருத்துரு ஏதேனும் இருக்கிறதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூல வினாவிற்கும், உங்கள் வினாவிற்கும் சம்பந்தம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

55—

புதிய கட்டடம்

***11742—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—